# ஜெம்ஸ் சத்தம்

Transforming Peoples to Transform Nations

ஜனவரி 2026



*for private circulation only*

**அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்;
அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்;
அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும்
கேடகமுமாகும்.** சங்கீதம் 91 : 4


ஜெபப் பங்காளர்கள்
மற்றும் வாசகர்கள்
அனைவருக்கும்
இனிய புத்தாண்டு
நல்வாழ்த்துகள்
ஜெம்ஸ் குடும்பத்தினர்
HAPPY NEW YEAR
2026


சபை ஊழியர் கருத்தரங்கு
சிக்காரியா




GOSPEL ECHOING MISSIONARY SO
Theme:
CONSULTATION
ON











# ஜெம்ஸ் சத்தம்

Transforming Peoples to Transform Nations


அன்பின் மடல் – 2

சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

வாலிபர் பகுதி – 8

பணித்தளச் செய்திகள் – 12

சிறுவர் பகுதி – 24

முன்னேற்றப் பணி முகவரிகள் – 27



*Published by*

**GEMS Educational and Media Services**



14/1, Jeba Nagar, Vasanthapuram South St.,
Melapalayam Post, Tirunelveli 627005
Ph. : 8925811572
E-Mail : gemssatham@gmail.com


## 'ஜெம்ஸ்' என்பது,

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹாராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.

# அன்பின் மடல்



*கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,*

நம் காலங்களைத் தன் கையில் வைத்திருப்பவரும் (சங். 31:15), சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாகச் செய்கிறவருமாகிய ஆண்டவருடைய ஒப்பற்ற நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துகள் (பிர. 3:11). அவரை பின்பற்றிச் செல்வதற்கு ஒப்புக்கொடுத்திருக்கிற நம்மை அவரே நடத்திச்செல்வார் (ஏசா. 58:11). சவால்களை மேற்கொள்ள அதுவே சாலச் சிறந்தது என்பது நாமறிந்ததே. ஆகையினால், குழப்பங்களையும், ஐயங்களையும், அச்சங்களையும் தவிர்ப்போம்; ஜெயகிறிஸ்துவாக அவர் நம்முன் செல்ல ஆயத்தமல்லவா!

குருடரைக்கூட அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குகிறவர் (ஏசா. 42:16).

நம்முடைய நம்பிக்கை நம் மீதிலோ (2 கொரி. 1:9) அல்லது நம்முடைய சொந்த பெலத்தின் மேலோ (சங். 20:7), ஐசுவரியத்தின் மேலோ (1 தீமோ. 6:17) இல்லாமல், ஜீவனுள்ள தேவன் மேலேயே எப்பொழுதும் இருப்பதாக. அவர் நமக்கென்று உண்டாக்கிவைத்திருக்கிறவைகள் நம்முடைய நினைவுகளைக் காட்டிலும் மேலானவை (ஏசா. 55:9).

**உலகத்திற்கு வெளிச்சமாகக் கொடுக்கப்பட்ட தேவ மக்களால் நிரம்பிய சபை, இன்று அநேக நேரங்களில் மங்கி எரிகிறது**; தேவ தயவுதான் அதனை அணைந்துபோகாமல் காத்துவருகிறது. இந்த வெளிச்சம் மங்கிப்போனதற்கான காரணங்களை உற்று நோக்குங்கால் பல உண்மைகள் தெரியவருவதோடு அதனை மீண்டும் ஒளி பெறச் செய்யவேண்டிய காரணங்களும் நமக்கு நன்றாக விளங்கக்கூடும். **கொழுந்துவிட்டு எரியச் செய்கிற ஆவியானவர் சபையில் கிரியை செய்யக்கூடாதபடி, வேறு ஆவிகள் கிரியை செய்ய இடம் கொடுக்கப்படும்போது, அது ஆவியின் கிரியைகளையும், கிருபைகளையும் அழித்துப்போட வல்லதாக இருக்கிறது** என்பது அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை.

எனவே, தேவப் பிள்ளைகள் இன்றைக்கு **ஆவிதனை பகுத்து அறியத்தக்கவர்களாகி,** ஜாக்கிரதையாய் சபையின் **ஒளியை அணைக்க வல்ல சக்திகளை அடையாளம் கண்டு,** அதில் அகப்பட்டுக்கொண்டோரை விடுவிக்கவேண்டிய அவசியம் அனைவருக்கும் உண்டு; தேவ ஒத்தாசையோடு செயல்படுங்கள்; ஜெபித்து முன்னேறுங்கள்; மற்றவர்களுக்குக் கற்றுத்தாருங்கள்.

சபையில் நடமாடும் பொல்லாத ஆவிதனையோ, அசுத்த ஆவிதனையோ அடையாளம் கண்டுகொள்வது அநேக வேளைகளில் எளிது. ஏனெனில், அது பொல்லாப்பை உண்டுபண்ணி **விரோதங்களை எழுப்பிவிடும் (நியா 9:23), பிரிவினை தலைவிரித்து ஆடும், கோள் சொல்லுதலும், புறங்கூறுதலும் எல்லா இடங்களிலும் செழித்தோங்கும் (நீதி 17:9, 11:13). கொலைவெறியும் சண்டையும், சச்சரவும், ஒத்துப்போகாமையும், எதற்கெடுத்தாலும் எதிர்த்து நிற்கும் சுபாவமும் தண்ணீர் ஊற்றி வளர்க்கப்படும்.** ஒருவர் முகத்தை மற்றவர் பார்ப்பதனையே பாவம் என்ற உணர்வைத் தூண்டிவிட்டு, இல்லாத பொல்லாதவைகளை ஏவிவிட்டு **பகையென்னும் தீயை எரியச்செய்து** அது அணையாதபடிக்கு எண்ணெய் ஊற்றிக்கொண்டேயிருக்கும். எனவே, அப்படிப்பட்ட ஆவி சபையில் கிரியை செய்யும்போது **ஆண்டவரின் பேரில் அன்பு கொண்டவரும், அவருடைய சரீரமான சபையை நேசிப்போரும், தேவ இராஜ்யத்தினைக் குறித்து அக்கறை கொண்டோரும்** இதனை எளிதாகக் கண்டுகொள்வார்கள்.

அசுத்த ஆவியின் சுபாவங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்ல. **நிர்வாணமாக்குதல், சுத்தமாக இருக்கவிடாமல் கட்டிப்போடுதல், தன்னையும்**

**மற்றவர்களையும் காயப்படுத்துதல், அசுத்தத்தை நடப்பிப்பதற்கு அசுசிப்படாதிருத்தல், கெட்ட வார்த்தைகளை அள்ளி வீசுதல், மற்றவர்களின் மனதில் அசுத்த எண்ணங்களைத் தூண்டிவிடும் காரியங்களைப் பகிர்ந்துகொள்ளுதல், மற்றவர்கள் அசுத்தத்தில் விழும்போது ஆனந்தம் கொண்டு "சபாஷ்" போடுதல், பாவத்தை விட்டு ஓயாத அவயவங்களாக தன்னுடைய அவயவங்களை (கண், காது, நாக்கு போன்றவை) மாற்றிக்கொள்ளுதல்** போன்றவை இந்த அசுத்த ஆவியினை அடையாளம் கண்டுகொள்ளப் போதுமானவை.

ஆனால், வஞ்சிக்கிற ஆவியின் நடமாட்டத்தையோ, செயல்பாடுகளையோ புரிந்துகொள்வது ஆவிக்குரிய பழக்கமில்லாதவர்களுக்கோ, தேவனோடு நெருங்கி நடக்காதவர்களுக்கோ, தேவப் பிரசன்னத்தை நாடுவதற்குத் தன்னை விட்டுக்கொடுக்காதவர்களுக்கோ எளிதல்ல.

**உலகத்தின் ஆவியும் இன்று சபைகளை நிரப்பிவருகிறது**. அது பிதாவினிடத்திலிருந்து வரவில்லை; ஆகையால், (1யோ 2:15,16) சில வேளைகளில் அதன் இழுப்பு அதிகமாக இருந்தபோதிலும் **எதிர் நீச்சல் அடிக்கக் கற்றுக்கொண்டோருக்கு** அதனை மேற்கொள்வது எளிதானதே. **உலகின் வழியில் சென்றுதான் உலக மக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டுவரமுடியும் என்ற வாதம் உலக இன்பங்களை அனுபவிக்கத் துடிக்க முயல்வோரின் சாக்குப் போக்கே.** இயேசுவும் 'நான் உலகத்தான் அல்லாததுபோல நீங்களும் உலகத்தார்கள் அல்ல' (யோ 17:16). உலகம் உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் (யோ 16:1, 19) என்று கூறி தம்முடைய நிலையையும், நம்முடைய நிலையையும் ஆணித்தரமாகக் கூறி தெளிவுபடுத்தியதோடு நம்மைக் காக்க உலகத்தின் ஆவியைத் தராமல் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே தந்தருளியிருக்கிறார் (1 கொரி 2:12). பவுலும் இதனைக் காண்பிக்க எண்ணி, நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம் (1 கொரி 4:9) என்றதோடு நில்லாமல், 'அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்' (கலா 6:14) என்று கூறுகிறார். எனவே **உலகத்தின் ஆவி எத்தனைதான் ஆவிக்குரிய வேடம் அணிந்தாலும் அது பட்சிக்கிற ஓநாய் ஆட்டுத் தோலைப் போர்த்தியதற்குச்**

**சமானம்**. அதனுடைய பசியினையும் ஆகாரத்தையும் கவனித்தாலே அது ஆட்டுக்குட்டியா? ஓநாயா? என்பது விளங்கிவிடும். அது புல் போன்ற மென்மையானவைகளை வாஞ்சிக்காமல் மாம்சத்தையே தேடும் அல்லவா? **அது இரவிலேயோ அல்லது மற்றவர்கள் கவனிக்காமல் இருக்கும்போதுதானே கிரியை செய்யும்**. அது மந்தையின் பெருக்கத்தினை அல்ல அழிவையேதான் நாடும். அப்படியே மந்தை பெருகினாலும் அதின் இரை அந்த மந்தையின் இரத்தத்தினை உறிஞ்சிக் குடிப்பதில் தான் கவனமாக இருக்கும். அதனுடைய பற்களும் கோரமானவைகள் அல்லவா.

அது சில நேரங்களில் நன்றாக நடந்து நீதியின் வழியில் நடந்தோரையும் பற்றிக்கொள்ளும் (அப் 20:29–30). இதற்கு இரையாகிப் போனவர்களின் எண்ணிக்கைக்கு அளவில்லை. **இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்காமல் இருக்க புதிதாக்கப்பட்ட மனமும் மறுரூபமாகவேண்டும் என்ற வாஞ்சையும்தான் காரணம்**. தேவன் அதனை உங்களுக்கு அருளிச்செய்வாராக.

அன்று **ஏதேன் தோட்டத்தில்** இந்த வஞ்சக ஆவியின் செயல்பாடு வெளிப்பட்டது. 'ஆகிலும் சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல...' (2 கொரி 11:3). **கடைசி காலத்தில்** இதனுடைய நடப்புகள் மிகுதியாகும் என்பதனையும் வேதம் சொல்லுகிறது. 'ஆவியானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறபடி **பிற்காலங்களிலே** மனச்சாட்சியில் சூடுண்டவருடைய மாயத்தினால் சிலர் **வஞ்சிக்கிற ஆவிகளுக்கும்** பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்' (1 தீமோ 4:1). ஏனென்றால், இரட்சிக்கப்படத்தக்கதாய் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால்... அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார் (2 தெச 2:10,12). அது **அந்திக்கிறிஸ்துவின் வருகைக்குச் சாதகமாக** சகல வல்லமைகளோடும் அடையாளங்களோடும் அற்புதங்களோடும் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்' (2 தெச 2:9,10).

**அந்திக்கிறிஸ்துவுக்கு உறுதுணையாக வரப்போகும் கள்ளத் தீர்க்கதரிசியும் பூமியின் குடிகளை மோசம்போக்குவதையே குறியாகக் கொண்டு செயல்படும்; அதற்காக அற்புதங்களை நடப்பிக்கும்**

(வெளி 13:13,14). அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள் ராஜாக்களையும் வஞ்சிக்கும் வல்லமை பெற்றவை, **அவை குறிப்பாக வாயிலிருந்து புறப்படுபவைகளே** (வெளி 16:13,14).

எப்படி பொய்யுரையாத தேவன் பொய்யை விசுவாசிக்கத்தக்க வஞ்சகத்தை அனுப்புவார் (2 தெச 2:12) என்பது விளங்கவில்லையே என அங்கலாய்ப்போருக்காக தேவன் பழைய ஏற்பாட்டில் ஒரு சம்பவத்தை எழுதிவைத்துள்ளார். தேவன் அனுமதிக்கிறார் என்பது தெளிவு.

1 இராஜா 22–ம் அதிகாரத்தில் ஆகாபின் மரணத்திற்கு காரணமான யுத்தத்தையும் தீர்க்கதரிசனங்களையும் உற்று நோக்குங்கால் இதனைப் புரிந்துகொள்வது எளிது. விக்கிரக ஆராதனைக்குத் தன்னை விற்றுப்போட்டு, தேவனுக்கு விரோதமாக ஜனங்களைத் திரும்பப் பண்ணின அவனுடைய முடிவை தேவன் தீர்மானித்து அதனை நிறைவேற்றுவதற்கு அவனாகத் தேடிப்போன ஓர் யுத்தத்தின் செய்தி இந்த அதிகாரத்தை நிரப்புகிறது.

அதிலே வஞ்சக ஆவி எப்படி கிரியை செய்கிறது என்பதனை உண்மை தீர்க்கதரிசியாகிய மிகாயா விளக்குகிறான் வச 19–28 வரை படித்துப்பாருங்கள். **ஆகாபை வழி தடுமாறச் செய்ய உதவினவர்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளே. ஒரு ஆவி (பொய்யின் ஆவி) 400 பேர் மூலமாக செயல்படமுடியும் என்பதும், அதுவும் தாங்கள்தான் ஆவியானவருக்குச் சொந்தக்காரர்கள் மற்றவர்களிடம் கிரியை நடப்பிப்பதற்கு தங்களைக் கேட்டுக்கொண்டுதான் அவர் செயல்படுவார் என்பது போல பேசும் கள்ளத் தீர்க்கதரிசிகளின் தலைவன் சிதேக்கியாவும் (வச. 24) இன்றைய சூழ்நிலைக்கு எத்தனையாய்ப் பொருந்துகின்றனர்.**

சாத்தான் தான் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமானவன் என்பதும், தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான் என்பதும் நாம் அறிந்ததே (யோவா 8:44) **அவன் விட்டுக்கொடுக்கும் எவனையும் எளிதான நிரப்பிவிடுகிறான்** என்பது ஆதி விசுவாசிகளான அனனியா சப்பீராளுடைய வாழ்வில் நடைபெற்றதும் நமக்குத் தெரிந்ததே (அப் 5:1–3). **தனக்குப் பெயர் வரவேண்டும், தன்னை மற்றவர்கள் பாராட்டவேண்டும் என்பதனையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் எவரும் சத்துருவுக்கு தன்னை விட்டுக்கொடுத்து வாழ்வது வெட்டவெளிச்சம்.**

'வஞ்சகம்' என்பதனை 'பொல்லாப்பு செய்ய இணங்கப் பண்ணுதல்' எனவும் கூறலாம். அதனை ஆங்கிலத்தில் 'enticing' என்கிறோம். நியமிக்கப்படடாத ஒரு கன்னிகையை ஒருவன் **மோசம் போக்கி** (enticing) அவளோடே சயனித்தால்... என்று கூறும் வேதம் (யாத் 22:16) ஒருவளின் கற்பை சூரையாடுவதனை 'வஞ்சகமான செய்கை' என்கிறது. **இன்று அநேக தேவ மக்கள் 'தீட்டுப்படக் காரணமாக வாழும், பேசும், தீர்க்கதரிசனங்களை கூறும் ஊழியங்களும், ஊழியர்களும் எந்த விதத்திலும் இவர்களுக்குக் குறைந்தவர்கள் அல்லவே**; அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

உபா 13:1–10 வசனங்களில், உன்னை ஜீவ தேவனை விட்டு திசை திருப்பும் (வச 10) எந்த மனிதனும் சாக வேண்டும் என்று கடுமையாக உரைக்கும் ஆண்டவர் 'enticing' என்ற வார்த்தையே உபயோகிக்கிறார். கூடவே, தண்டிக்கபடவேண்டியதினை வெளிப்படுத்துகிறார். ஒருவேளை இன்றைய புதிய ஏற்பாட்டு யுகத்தில் நாம் கொலை செய்ய அல்ல, **அவர்களை ஓரம் கட்டுவதற்குக் கற்றிருக்கவேண்டும். அவர்களை ஒதுக்கிவைப்பதற்குப் பதிலாக மாலை போட்டு வரவேற்று, வாழ்த்துப்பாடி புகழாரம் சூட்டி அவர்களை நீதிமான்களாகக் காண்பிக்க சபை உந்தப்படுமாயின் வெளிச்சம் மங்கத்தானே செய்யும்**.

'துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவன்... கர்த்தருக்கு அருவருப்பானவன்' என்று வேதம் சொல்லுகிறதே (நீதி 17:15). **அருவருப்பு உள்ள இடத்தில் தேவன் அசைவாட முடியாதே** ஒத்துக்கொள்வோம்; சபையின் பிரகாசம் பெருக பாடுபடுவோம். 'உன் ஒளி வந்தது கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. உன் வெளிச்சத்தினிடத்திற்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியிடத்திற்கு இராஜாக்களும் நடந்து வருவார்கள். கடற்கரையின் திரளான கூட்டம் உன் வசமாகத் திரும்பும். **ஜாதிகளின் பலத்த சேனை உன்னிடத்திற்கு வரும்** (ஏசா 60:1,3,5).' சபை பெருகட்டும், தேசம் அசையட்டும்; வெற்றி வேந்தர் இயேசு மங்கி எரிகிற திரியை அணையாதவர் மாத்திரம் அல்ல **பொங்கி எரிய எண்ணெய் ஊற்றுபவர்**. எழுந்து பிரகாசியுங்கள், மற்றவர்களையும் எரியப்பண்ணுங்கள். சபைகள் எரிந்து பிரகாசிக்கட்டும், தேசத்தில் இருள் நீங்கி வெளிச்சம் உதிக்கட்டும்; செயல்படுவோம்!.

**அன்பரின் அறுவடைப் பணியில்**

**அன்பு சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்**



## வாலிபர் பகுதி

# வாலிபருக்குள் ஓர் வாலிபன்

**இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரைக் கொண்டுவரவும், அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக்கொடுக்கவும் ராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குக் கற்பித்தான்.** (தானி 1:3,4)

தானியேலும் அவன் உடனிருந்த வாலிபர்களும் சாதாரணமானவர்கள் அல்ல, அழகானவர்கள், அறிவிலே சிறந்தவர்கள், எதனையும் எளிதாகக் கற்றுக்கொள்ளும் திறமை படைத்தவர்கள். அவர்களுக்கு பாபிலோன் தேசத்திலே, நேபுகாத்நேச்சாரின் அரண்மனையிலே உயர்தர ஆகாரமும், கல்வியும் கொடுக்கப்பட்டது. ராஜாவின் கட்டளையின்படி விசேஷித்தவர்களாக அரண்மனையிலே அந்த வாலிபர்கள் நடத்தப்பட்டார்கள், போஷிக்கபட்டார்கள். தானியேலோ அந்த வாலிபர்களுக்குள் வித்தியாசமுள்ளவனாயிருந்தான். மூன்று வருடங்கள் கொடுக்கப்படும் பயிற்சியைப் பெற்று அரண்மனையிலே பதவியை அடையும் எண்ணம் தானியேலை ஈர்க்கவில்லை. **தகப்பனும், தாயும், ஊராரும், உறவினரும் மற்றும் நண்பர்களும் பார்க்கக்கூடாத தேசத்தில் இருந்தாலும், கர்த்தருக்காக வித்தியாசமுள்ளவனாக தானியேல் வாழ விரும்பினான்.**

தனிமையில் இருக்கும்போது பல வாலிபர்கள் விழுந்துவிடுகின்றனர். தனித்திருக்கும் நேரத்தில் ரகசிய பாவங்களுக்கு உடன்பட்டுவிடுகின்றனர். உள்ளத்திலே பல நாட்களாக மறைந்து கிடக்கின்ற ரகசிய பாவங்கள் அனைத்தும் அரங்கேறுவது தனிமையிலேயே. அறிந்தவர்களும், தெரிந்தவர்களும் அறியக்கூடாத தூரமான இடத்தில் வாழும்போது, வாழ்க்கையில் சிறந்ததோர் இடத்தைப் பெறும்போது, பாவத்திற்குள் தள்ளி சரீரத்தையும் மனதையும் கெடுத்து, அத்துடன் ஆவியையும் அசுசிப்படுத்துவதற்கு ரகசிய பாவத்திற்கு வலிமை உண்டு. நல்ல குடும்பத்திலும், சபையிலும் இருந்தாலும், **தேவ பயமற்ற வாலிபர்கள் ரகசிய பாவத்திற்குள் கிடக்கின்றனர்.**

வாலிபனான உனக்கு தானியேலின் வாழ்க்கை ஓர் மாதிரி. தானியேல் விரும்பினதைப் புசிக்கலாம், ராஜாவின் உணவையும், ராஜா குடிக்கும் ரசத்தையும் பருகலாம்; அனைத்தும் அவன் கண்களுக்கு முன்னே, கைக்கு எட்டும் தூரத்திலேயே இருந்தது. தானியேல் என்ன செய்தாலும் அவனைக் குற்றப்படுத்த அங்கு யாரும் இல்லை. தானியேல் தனது இஷ்டப்படி வாழ்ந்தால் உடனிருந்த நண்பர்கள் அவனைக் குற்றப்படுத்தும் நிலை உருவாகலாம், ஆனால் மன்னனின் அரண்மனையிலோ தானியேலையும் அவனது போஜனத்தையும் குறித்து குற்றப்படுத்த யாருமில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தேவனுக்குப் பிரியமானவனாகவே வாழ்ந்தான் தானியேல்.

திருடனாய், பொய்யனாய், ஆகாதவனாய், வீம்பு பேசுகிறவனாக தேவனுக்கு விரோதமான காரியங்களுக்குத் தங்களை விற்றுப்போட்டிருந்த பல வாலிபர்களை தேவன் சந்தித்திருக்கின்றார். கூட்டங்களிலோ, முகாம்களிலோ கலந்துகொள்ளும்போது பல வாலிபர்கள் தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கின்றனர். காலையில் எழுந்து ஜெபிப்பதையும், வேதத்தை நிதம் ஆராய்ந்து அறிவதையும் வழக்கமாக்கிக் கொண்ட வாழ்க்கை வாழும் ஒரு வாலிபன், சோதனையான இடத்தில் வைக்கப்பட்டால் அல்லது அவனது செய்கைகளையோ, வார்த்தைகளையோ, மனதின் காரியங்களையோ எவரும் குற்றப்படுத்தாத இடத்தில் வைக்கப்பட்டால் அவனது நிலை என்ன?

தானியேலைச் சுற்றியிருந்த வாலிபர்கள் அனைவரும் இஸ்ரவேல் தேசத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் தானியேலுடன் வளர்ந்தவர்களும், வேத வாக்கியங்களை நன்கு அறிந்தவர்களுமாயிருந்தார்கள். யூத குலத்தைச் சேர்ந்த தாய் தனது பிள்ளைக்கு வாரத்திற்கு சுமார் 14 மணி நேரம் இறையியல் சொல்லிக்கொடுப்பது வழக்கம். யூத வாலிபர்களுக்கு வாரத்தில் சுமார் 18 மணி நேரம் ஜெப ஆலயத் தலைவன் ஜெப ஆலயத்திலே இறையியல் சொல்லிக்கொடுப்பது வழக்கம். இப்படி வளர்க்கப்பட்ட யூத வாலிபர்கள் விக்கிரங்களைப் பற்றியும், மதுபானத்தைக் குறித்தும், மற்றவர்களால் உண்டாகும் தீட்டுகளைக் குறித்தும் நன்கு அறிந்தவர்கள், சிறு வயதிலிருந்தே அவைகளைக் குறித்து போதிக்கப்பட்டவர்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட தன் உடன் இருக்கும் யூத வாலிபர்கள், பாபிலோன் தேசத்தில் நேபுகாத்நேச்சாரின் அரண்மனையில் வெறுக்கப்படவேண்டிய அனைத்தையும் சாப்பிடுகிறதை தானியேல் கண்டான். ராஜாவினால் கொடுக்கப்படும் பயிற்சி என்ற எண்ணத்தில் அனைத்தையும் அந்த வாலிபர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு நாளில் தேசத்தில் அதிகாரியாக உயர்த்தபடவிருக்கிறோம் என அவர்கள் நினைத்துக்கொண்டிருந்தார்கள். அருவருப்புகளைச் செய்தவர்கள் இஸ்ரவேல் தேசத்திலே அழிக்கப்பட்டுவிட்டார்கள், தேவனுக்குப் பயந்து வாழ்ந்தபடியினாலேயே தேவன் நம்மை பாபிலோன் தேசத்தில் உயர்த்தி, எல்லாவற்றையும் அனுபவிக்கும் நிலையில் வைத்திருக்கிறார் என அந்த வாலிபர்கள் நினைத்தனர். தேவனுக்குப் பயந்து வாழ்ந்த நம்மேல் கர்த்தர் இரக்கம் பாராட்டினதினாலேயே, கைதியாகப் பிடிக்கப்பட்டு

கொண்டுவரப்பட்டிருந்தாலும், ராஜ மரியாதையுடன் நடத்தப்படுகிறோம் என எண்ணினார்கள்.

ஆண்டவருக்குப் பிரயோஜனமாய் நடந்ததினால் என்ன பிரயோஜனம்? என்ற கேள்வி தானியேலின் முன் வந்தாலும், தானும் மற்ற வாலிபர்களைப் போல அடிக்கப்பட்டு, காயப்படுத்தப்பட்டு பாபிலோனிய சேவகர்களால் ஒன்றரை மாதம் நடத்திக்கொண்டுவரப்பட்டவன் என்ற நினைவு அவனுக்குள் இருந்தாலும்; **பாபிலோன் தேசத்திலும் தன் உடனிருக்கும் வாலிபர்களைக் காட்டிலும் வித்தியாசமுள்ளவனாக வாழ தானியேல் தன்னை ஒப்புக்கொடுத்தான்**. இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தேவனுக்குப் பிரியமாய் வித்தியாசமாக வாழும் வாலிபர்களை தானியேல் தேடியபோது, உடனிருந்த வாலிபர்களுக்குள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று வாலிபரை அவன் கண்டுகொண்டான். "இனம் இனத்தோடு, வெள்ளாடு தன்னோடு" என்ற தமிழ் பழமொழியின்படி ஒரே எண்ணமுடைய அந்த வாலிபர்கள் ஒன்றாக இணைந்துகொண்டனர்.

**ஆவிக்குரிய வாலிபன், ஆவிக்குரிய வாலிபனை எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடியும்**. குடிக்கிற வாலிபன், குடிக்கிறவனை எளிதில் அடையாளம் கண்டுகொண்டு அவனுடன் இணைந்துகொள்ளுவான். பாவம் பாவத்தைப் பிடித்து இழுப்பதுபோல, **பரிசுத்தம் பரிசுத்தத்தைப் பிடித்து இழுத்துக்கொள்ளும்**. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று வாலிபர்களையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டான் தானியேல். அங்கிருந்த வாலிபர்களில் பிற வாலிபர்கள் பாபிலோன் ராஜாவின் போஜனத்தைச் சாப்பிட தங்களை விட்டுக்கொடுத்தனர்.

**தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம்பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்.**(தானி 1:8)

**அப்பொழுது பிரதானிகளின் தலைவனாலே, தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள்மேல் விசாரிப்புக்காரனாக வைக்கப்பட்ட மேல்ஷார் என்பவனைத் தானியேல் நோக்கி: பத்துநாள்வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும்; எங்களுக்குப் புசிக்கப் பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும்; பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான்.** (தானி 1:11-13)

தானியேல் தனி வாலிபனாகவே முதலில் தீர்மானம் செய்தான்; ஆனால், இப்பொழுதோ நான்கு வாலிபர்கள் உள்ள குழு உருவாகிவிட்டது. **வாலிபனே நீ உன்னுடைய தீர்மானத்தில் உறுதியாயிருந்தால், உன்னோடு கூட இருப்பவர்களையும் இணைத்துக்கொள்வது எளிதானது**.

எல்லா சூழ்நிலைகளிலும், என்ன நடந்தாலும், வேறு இடத்திற்குத் தள்ளப்பட்டாலும், கவனிப்பதற்கு ஒருவரும் இல்லையென்றாலும், எல்லாவற்றிலும் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தாலும், விடுதலையோடிருந்தாலும் தேவனுக்கு முன்பாக எடுத்த தீர்மானத்தைக் காத்துக்கொள்ளவேண்டும், கடைசிவரை

அதில் நிலைத்து நிற்கவேண்டும். தானியேல் என்ற ஒரு வாலிபன் என்னைத் தீட்டுப்படுத்த விடமாட்டேன் என்று தனது தீர்மானத்தில் நிலைத்து நின்றதால், மேலும் மூன்று பேர் தீட்டுப்படாதபடிக்குத் தங்களைக் காத்துக்கொள்ள தீர்மானித்தனர்.

உடலிலிருந்து ஒரு முடி விழுந்துவிட்டாலும், உயிர் நீத்துவிடும் என கவரிமானைக் குறித்து தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன; அத்தனை உணர்வுடையது, உறுதியானது அது. காட்டுப் புறாவைக் குறித்து வேதத்தில் சொல்லப்பட்ட எல்லா பகுதிகளிலும், ஒரு ஜோடி காட்டுப் புறா என்றே சொல்லப்பட்டுள்ளது. யோசேப்பும் மரியாளும் இயேசுவை பிரதிஷ்டை செய்ய ஆலயத்திற்குக் கொண்டுவந்தபோது, எட்டாம் நாளில் பலியிட்டு விருத்தசேதனம் செய்து சுத்திகரிப்பைச் செய்தபோது, ஒரு ஜோடி காட்டுப் புறாக்களைச் செலுத்தவேண்டும் என்ற கற்பனைக்குக் கீழ்ப்படிந்தார்கள். ஜோடியாக வாழும் காட்டுப் புறாக்களைப் பிரிக்க முடியாது, அப்படி பிரிக்கப்பட்டால் மற்றொன்று தற்கொலை செய்துகொள்ளும். பத்திரிக்கையிலே பல வருடங்களுக்கு முன் ஒரு செய்தி வந்தது. வேட்டைக்காரன் ஒருவன் வேட்டைக்குச் சென்றான், இரண்டு காட்டுப்புறாக்கள் ஜோடியாக உட்கார்ந்திருந்தன, ஒன்றை அவன் அடித்தான் அது செத்து விழுந்தது. வேடன் அதை எடுத்துக்கொண்டு செல்லும்போது, உடனிருந்த மற்றொரு புறாவும் வழியில் செத்துக் கிடந்தது. வேடன் அதைப் பார்த்தபோது, அதன் தொண்டையிலே கூழாங் கல் இருந்தது. உடனிருந்த புறாவை வேடன் வீழ்த்திவிட்டதினால், அதன் ஜோடியான இந்தப் புறா கூழாங்கல்லை விழுங்கி தற்கொலை செய்துகொண்டதை வேடன் அறிந்துகொண்டான்.

ஆவியையும், ஆத்துமாவையும், சரீரத்தையும் ஆண்டவருக்குக் கொடுத்த மனிதனும் இப்படியே இருப்பான். **என் சரீரத்தை, ஆவியை, ஆத்துமாவை மாசுப்படுத்த விடமாட்டேன் என்று உறுதியான தீர்மானத்தை எடுக்கிற வாலிபர்கள் ஆண்டவருக்குத் தேவை.** ஆவியையும், ஆத்துமாவையும், சரீரத்தையும் கறைபடவிடாமல் காத்துக்கொள்கிற வாலிபர்கள் இன்றும் உண்டு. எந்த சூழ்நிலையில் நீ வைக்கப்பட்டாலும், எந்த சூழ்நிலை எதிராக வந்தாலும், எவரும் உடன் நிற்காமல் போனாலும், என் ஆண்டவருக்காக ஆவி, ஆத்துமா, சரீரத்தை மாசு படாமல் காத்துக்கொள்ளுவேன் என்று தீர்மானம் எடுத்தால், நீ வித்தியாசமுள்ளவனாகவும், மற்றவர்களையும் ஈர்க்கிறவனாகவும் மாறிவிடுவாய்.

வாலிபனே!... உன்னைத் தீட்டுப்படுத்துகின்ற காரியங்கள் எந்த விதத்திலும், எந்த ரூபத்திலும் வந்தாலும் அதற்கு இடம் கொடுத்துவிடாதே. ஆண்டவரால் அங்கீகரிக்கப்பட்ட பாத்திரமாக, முத்திரிக்கப்பட்ட பாத்திரமாக, கிராமங்களில், நகரங்களில், குடும்பத்தில், கல்லூரிகளில், வேலை ஸ்தலங்களில் வித்தியாசமான வாழ்க்கை வாழவே கர்த்தர் உன்னை அழைத்திருக்கிறார்.

*(சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் எழுதிய வித்தியாசமுள்ளவனாயிரு புத்தகத்திலிருந்து)*

# பணித்தளச் செய்திகள்
## கிழக்கு மண்டலம்

**ஜனவரி 01**

ஜெம்ஸ் ஹிந்தி சபை ஊழியங்கள் (GEMS Hi-Chal) மூலமாக, அக்பர்பூர், அருவல் மற்றும் பன்சாரி ஆகிய பணித்தளங்களில் இரண்டு நாட்கள் நடைபெற்ற சிறப்பு ஆத்தும ஆதாயப் பயிற்சி முகாம்களில், பணித்தள ஊழியர்கள் உட்பட, ஆத்தும ஆதாயப் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் வாஞ்சையுடைய 90 சகோதர சகோதரிகள் பங்கேற்றனர். இப்பயிற்சியில் பங்கேற்றோர், கிறிஸ்துவை அறியாத மக்களை சுவிசேஷத்தின் மூலம் கிறிஸ்துவண்டை வழிநடத்தவும், பணித்தளங்களில் இவர்கள் மூலம் செய்யப்படவிருக்கும் ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 02**

டிசம்பர் 1, 2025 அன்று கயா பணித்தளத்தில் நடைபெற்ற கிழக்கு மண்டல ஊழியர் கூடுகையில், பணித்தள சபை ஊழியர்கள் 90 பேர் கலந்துகொண்டனர். இக்கூடுகையில், சகோ. ஜோ பால்சன் பங்கேற்று ‘எழுந்து பிரகாசி’ என்ற தலைப்பின் கீழ் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டு, ஊழியர்களை ஜெபத்தில் நடத்தினார். பணித்தள ஊழியர்களின் சரீர சுகத்திற்காகவும் மற்றும் ஊழியங்களில் அவர்கள் வல்லமையாகப் பயன்படுத்தப்படவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 03**

டிசம்பர் 19, 2025 அன்று, மகய் - 2 கோட்டத்தின் கிரிடி பணித்தளத்திற்கு அருகிலிருக்கும் பெங்காபாத் கிராமத்தில் கிறிஸ்மஸ் விழாவுடன், விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. இதன் மூலம், அக்கிராமத்தில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கான வாசலை கர்த்தர் திறந்துள்ளார். இக்கிராமத்தில் வரும் நாட்களில் நடைபெறவிருக்கும் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

**ஜனவரி 04**

மகய் - 2 கோட்டத்தின் சேர்காட்டி பணித்தளத்தில் ஏழை விதவைகளுக்கு சுவிசேஷம் அறிவித்து, அவர்களுக்காக ஜெபித்து, இலவச ஆடைகளையும் வழங்க கர்த்தர் உதவிசெய்தார். இப்பணித்தளத்தில் செய்யப்பட்டுவரும் சுவிசேஷ ஊழியங்களுக்காகவும் மற்றும் இங்கு ஊழியத்திற்குக் காணப்படும் எதிர்ப்புகள் மாறவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 05**

மகய் - 1 கோட்டத்தின் சேக்பூரா பணித்தளத்தில், டிசம்பர் 17, 2025 அன்று நடைபெற்ற கிறிஸ்மஸ் நிகழ்ச்சியின் மூலமாக, கூடிவந்த பணித்தள மக்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியினை அறிவிக்க கர்த்தர் உதவிசெய்தார். தொடர்ந்து, மசௌடி பணித்தளத்தில் நடைபெற்ற கிறிஸ்மஸ் நிகழ்ச்சின் மூலமாகவும் பணித்தள மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்றோர், கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட ஜெபிப்போம்.

**ஜனவரி 06**

கயா மாவட்டத்தின் டெக்னோபார்ம், பாங்கே பஜார் மற்றும் நவாதா மாவட்டத்திலுள்ள மாக்ரைன் ஆகிய கிராமங்களில் செயல்பட்டுவரும் ஜெம்ஸ் டியூசன் மையங்களில், 2025 டிசம்பர் 21 மற்றும் 22 ஆகிய தினங்களில் நடைபெற்ற கிறிஸ்மஸ் விழாவில், சிறியோர், வாலிபர் மற்றும் பெற்றோருக்கு கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியினை அறிவித்து, ஏழை மக்களுக்கு குளிராடைகளையும் வழங்க கர்த்தர் உதவிசெய்தார். பணித்தளங்களில் நடைபெற்றுவரும் டியூசன் மையங்களுக்காகவும், புதிய பணித்தளங்களில் டியூசன் மையங்கள் தொடங்கப்படவும் மற்றும் குளிர் காலத்தில் பணித்தள மக்களின் பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.

## ஆத்தும ஆதாயப் பயிற்சி முகாம்




## ஊழியர் கூடுகை




## கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள்


சேர்காட்டி


கயா


பெங்காபாத்



# மேற்கு மண்டலம்

**ஜனவரி 07**

"போஜ்புரி" 2 கோட்டத்தின் பம்ஹன் பரேட்டா கிராமத்தில் நடைபெற்ற ஜெம்ஸ் இலவச மருத்துவ முகாம் மூலமாக 420 பேர் பயனடைந்தனர். இம்முகாமில், 16 மருத்துவ ஊழியர்கள் கலந்துகொண்டு, மக்களுக்கு சிகிச்சையளித்ததுடன் இயேசு கிறிஸ்துவின் அன்பினையும் அறிவிக்க கர்த்தர் கிருபைசெய்தார். இக்கிராமத்தில் நடைபெற்றுவரும் சுவிசேஷப் பணிகளின் மூலமாக வரும் நாட்களில் அநேக ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்பட ஜெபிப்போம்.

**ஜனவரி 08**

"போஜ்புரி" 2 கோட்டத்தில், பிலிப்பியர் மற்றும் கொலோசெயர் நிருபங்களிலிருந்து நடைபெற்ற வேதாகமப் போட்டியில் பணித்தள மக்கள் 700 பேர் ஆர்வமுடன் பங்கேற்றனர். இவ்வகை வேதாகமப் போட்டிகள் வேத வாசிப்புப் பழக்கத்தினை விசுவாசிகளிடையே ஊக்குவிப்பதுடன், வசனத்தின் அடிப்படையில் தங்கள் வாழ்க்கையினை ஊன்றக் கட்டுவதற்கும் உறுதுணையாக அமைவது குறிப்பிடத்தக்கது. வரும் நாட்களிலும் பணித்தளங்களில் நடைபெறவிருக்கும் இவ்வகை வேதாகமப் போட்டிகளுக்காகவும் மற்றும் விசுவாசிகளின் குடும்பங்களுக்காகவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 09**

"சசராம் பணித்தளத்தில் கட்டப்பட்டுவரும் ஜெம்ஸ் செயல் மையத்தின் மேற்கூரைப் பணிகள் முடிவடைய கர்த்தர் உதவிசெய்தார். தொடர்ந்து நடைபெற்றுவரும் இச்செயல் மையத்தின் கட்டுமானப்பணிகள் எவ்விதத் தடையுமின்றி நிறைவடையவும் மற்றும் இப்பணித்தளத்தில் நடைபெற்றுவரும் ஆத்தும ஆதாய ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 10**

"வட இந்தியாவை அதிகமாகத் தாக்கிவரும் இக்குளிர் நாட்களில், பணித்தளங்களில் சுமார் 200 குடும்பத்தினருக்கு இலவசமாக கம்பளிகளை வழங்க கர்த்தர் உதவிசெய்தார். விசுவாசிகள் மற்றும் ஊழியர்களை கர்த்தர் இக்குளிர் காலத்தில் பாதுகாக்க ஜெபிப்போம்.

**ஜனவரி 11**

"பெலாவன் பணித்தளத்தில் நடைபெற்றுவரும் பணித்தள ஆலயக் கட்டுமானப்பணிகள் தடையின்றி நடைபெறவும், விரைவில் பணிகள் நிறைவுற்று ஜனங்கள் தேவனை ஆராதிக்கவும், வரும் நாட்களில் பணித்தளங்களில் நடைபெறவிருக்கும் நற்செய்தி ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம்.

## மருத்துவ முகாம்



## பணித்தள ஆலயக் கட்டுமானப் பணி

பெலாவன்



## வேத வினாப் போட்டி



# வடக்கு மண்டலம்

**ஜனவரி 12**

ஷாவக்பூர் பணித்தளத்தில் ஒருநாள் சிறப்புக் கூடுகை நடைபெற்றது; விசுவாசிகள் விசுவாசத்தில் வளரவும், தங்கள் ஜெப வாழ்க்கையில் முன்னேறவும் மற்றும் வசனத்தை அறிந்துகொள்ளவும் இக்கூடுகை வழிவகுத்தது. சென்னையைச் சேர்ந்த சகோ. ரூபன் இக்கூடுகையில் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டு, விசுவாசிகளை ஜெபத்தில் வழிநடத்தினார். விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்து நிற்கவும், ஆத்தும ஆதாயகர்களாக மாறி கர்த்தருடைய மந்தையில் ஆத்துமாக்களை சேர்க்கவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 13**

மைதிலி 1 கோட்டத்தின் தர்பங்கா மற்றும் சிசோ ஆகிய பணித்தளங்களில் நடைபெற்ற பெண்கள் கூடுகையில் 150 பேர் பங்கேற்றனர். இக்கூடுகையில், ஜெம்ஸ் பெண்கள் முன்னேற்ற ஊழியக் குழுவினர் கலந்துகொண்டு தேவ செய்தியுடன், பெண்களின் வாழ்க்கைக்கான சிறப்பு ஆலோசனைகளையும் வேத வசனங்களின் அடிப்படையில் அளித்து அவர்களுக்காக ஜெபித்தனர். கலந்துகொண்ட ஒவ்வொரு பெண்களுக்கும் இக்கூடுகை ஆசீர்வாதமாக அமைந்தது. பணித்தளப் பெண்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையின் மத்தியிலும் தேவனை பிறருக்கு அறிவிக்கவும், தங்கள் குடும்பங்களில் எரியும் தீபங்களாக விளங்கவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 14**

டிசம்பர் 12, 2025 அன்று ராம்பூர் மற்றும் பாட்னா பணித்தளங்களில் நடைபெற்ற பெண்கள் கூடுகையில் பணித்தள விசுவாசிகள் 90 பேர் கலந்துகொண்டனர்; சகோதரி சஜிலா நார்டன் இக்கூட்டத்தில் கர்த்தருடைய செய்தியைப் பகிர்ந்துகொண்டார். குளிர் நாட்களில் பணித்தள விசுவாசிகள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும், பணித்தளங்களில் காணப்பட்டுவரும் ஊழியத்திற்கு எதிராக விரோதங்கள் மாறவும், எதிர்ப்போர் கர்த்தரைக் கண்டுகொள்ளவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 15**

நிர்மாலி மற்றும் மணிகாச்சி ஆகிய பணித்தளங்களில் டிசம்பர் 18 அன்று நடைபெற்ற கிறிஸ்து பிறப்பு தின நிகழ்ச்சியில் பணித்தள மக்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். பாடல்கள் மற்றும் குறுநாடகங்களுடன் கிறிஸ்து பிறப்பின் காரணத்தை எடுத்துக்கூறி, சுவிசேஷத்தையும் அறிவிக்க கர்த்தர் கிருபை செய்தார். இப்பணித்தளங்களில் வரும் நாட்களில் தொடர்ந்து செய்யப்படவிருக்கும் ஊழியங்களுக்காகவும் மற்றும் ஆத்தும அறுவடை இப்பகுதியில் பெருகவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 16**

கோரியா மற்றும் தர்பங்கா பணித்தளங்களில் டிசம்பர் 21 அன்று ஞாயிறு பள்ளி பிள்ளைகள் மூலம் நடைபெற்ற கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகள் வாயிலாக, பங்கேற்ற பணித்தள மக்கள் பலருக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் உதவிசெய்தார். இந்நிகழ்ச்சியில், 260 ஞாயிறு பள்ளி சிறுவர் சிறுமியரும் மற்றும் அவர்களது பெற்றோர்களும் கலந்துகொண்டனர். பணித்தளங்களில் நடைபெற்றுவரும் சிறுவர் ஊழியங்களுக்காகவும், அவர்கள் மூலமாக சமுதாயமும் குடும்பங்களும் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.


பெண்கள் கூடுகை


கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி


பெண்கள் கூடுகை - ராம்புரா
Be Prepared - Prepare Others Too




சிறப்புக் கூடுகை

# தெற்கு மண்டலம்

**ஜனவரி 17**

சித்தி பணித்தளத்தில் மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாசக் கூட்டத்தில் 250 பேர் பங்கேற்றனர்; சகோ. சைலஸ் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டார். பணித்தள ஊழியங்களுக்காகவும், தேசம் கிறிஸ்துவை அறிந்துகொள்ளவும் விசுவாசிகள் ஒருமனதுடன் இணைந்து ஜெபித்தனர். கர்த்தருடைய பந்தியுடன் ஆசீர்வாதமாக இக்கூட்டம் நிறைவடைந்தது. விசுவாசிகள் மத்தியில் ஜெப வாஞ்சை பெருகவும், புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் ஆத்துமாக்களுக்காகவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 18**

உமரியா பணித்தளத்தில் நடைபெற்ற மூன்று நாள் உபவாசக் கூடுகையில் சகோ. கயா பிரசாத் தர்வையா கலந்துகொண்டு, விசுவாசிகளை ஜெபத்தில் வழிநடத்தினார். இக்கூட்டங்களில், 159 விசுவாசிகள் பங்கேற்றனர். மேலும், மஜியாவன் பணித்தளத்தில் நடைபெற்ற உபவாசக் கூடுகையிலும் 180 விசுவாசிகள் பங்கேற்று தேசத்திற்காக பாரத்துடன் ஜெபித்தனர். பணித்தள விசுவாசிகள் விசுவாசத்தில் பெலப்படவும், பணித்தளங்களில் வாலிபர்கள் சந்திக்கப்படவும், வாலிபர் மத்தியில் செய்யப்படும் ஊழியங்கள் பலன் தரவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 19**

சித்தி, உமரியா, தேவ்கான் மற்றும் சத்னா ஆகிய பணித்தளங்களில் கிறிஸ்துவை தங்கள் வாழ்க்கையின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட 27 பேர், கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை உடன்படிக்கையின் வாயிலாக வெளிப்படுத்தினர்; தேவனுக்கே மகிமை! இவர்கள் விசுவாசத்தில் நிலைத்து நிற்கவும், இவர்கள் மூலமாக இவர்களது குடும்பம் மற்றும் உறவினர்கள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 20**

பீஹார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில், ஜெம்ஸ் மருத்துவ ஊழியங்கள் மூலமாக, பணித்தள மக்கள் சுமார் 2000 பேருக்கு இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சையினை வழங்கவும், அவர்களுக்கு சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்ளவும் கர்த்தர் உதவிசெய்தார். ஜெம்ஸ் மருத்துவ ஊழியங்கள் மூலமாக வரும் நாட்களில் பணித்தளங்களில் செய்யப்படவிருக்கும் இலவச மருத்துவ முகாம்களின் மூலமாக, ஜனங்கள் சரீர மற்றும் ஆத்தும விடுதலை பெற ஜெபிப்போம்.

**ஜனவரி 21**

முகமத்கஞ்ச் பணித்தளத்தில் நடைபெற்ற GIANT கூட்டத்தில், 120 விசுவாசிகள் பங்கேற்றனர்; சகோ. ஹென்றி கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டார். அவ்வாறே, ஜப்லா பணித்தளத்தில் நடைபெற்ற இரவு ஜெபத்தில் 30 பேரும், சுந்தர்பூர் பணித்தளத்தில் நடைபெற்ற ஜெபக்கூடுகையில் 250 பேரும் கலந்துகொண்டு பல்வேறு ஜெபக்குறிப்புகளுக்காக பாரத்துடன் ஜெபித்தனர். பணித்தளங்களில் நற்செய்திக் கூட்டங்கள் எவ்விதத் தடையுமின்றி நடைபெறவும், நற்செய்தியினால் ஜனங்கள் விடுதலையடையவும் ஜெபிப்போம்.


மருத்துவ முகாம்
GIANT - கூடுகை
உபவாசக் கூடுகை

# வட மேற்கு மண்டலம்

**ஜனவரி 22**

டிசம்பர் 5, 2025 அன்று கோட்வா கிராமத்தில் நடைபெற்ற சுவிசேஷ ஊழியத்தில் 65 பேருக்கு நற்செய்தியினை அறிவிக்கவும், மச்சாஹா, பேரியா தட்வா நந்த்பூர், டோலா சுகௌலி, பிப்ரா, மந்திர் பாளி போன்ற பணித்தளங்களிலும் மற்றும் சனபட்டியா அரசு பள்ளியிலும் நடைபெற்ற சிறுவர் ஊழியங்களில் வேதாகமச் சம்பவங்கள், வசனங்கள் மற்றும் பாடல்கள் மூலமாக கிறிஸ்துவின் அன்பினை சிறுவர் சிறுமியருக்கு அறிவிக்கவும் கர்த்தர் உதவிசெய்தார். இப்பணித்தளங்களில் தொடர்ந்து நடைபெற்றுவரும் ஊழியங்களின் மூலமாக ஆத்துமாக்கள் கிறிஸ்துவண்டை சேர்க்கப்படவும், பாவத்திலும் மற்றும் பிசாசின் கட்டிலும் அகப்பட்டிருக்கும் ஜனங்கள் விடுதலையடையவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 23**

நர்கட்டியகஞ்ச் பணித்தளத்தில் நடைபெற்ற பெண்களுக்கான சிறப்புக் கூட்டத்தில் 30 பெண்கள் பங்கேற்றனர். இக்கூட்டத்தில், சகோதரி எலிசாபா பெங்க்ரா கர்த்தருடைய செய்தியைப் பகிர்ந்துகொண்டார். பங்கேற்ற ஒவ்வொருவருக்கம் இக்கூடுகை ஆசீர்வாதமாக அமைந்தது. பணித்தளத்தில் பெண்கள் மத்தியில் நடைபெற்றுவரும் ஊழியங்களுக்காகவும், பெண்கள் மூலமாக சமுதாயத்தில் மற்றும் குடும்பங்களில் தேவன் மாற்றத்தைக் உண்டாக்கவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 24**

டிசம்பர் 17, 2025 அன்று, சப்ரா பணித்தளத்தின் ஜெம்ஸ் செயல் மையத்தில் நடைபெற்ற வாலிபர் கூடுகையில், 130 வாலிப சகோதர சகோதரிகள் பங்கேற்றனர். இக்கூடுகையில், சகோ. பழனிவேலு கர்த்தருடைய செய்தியைப் பகிர்ந்துகொண்டதுடன், வாலிபரின் வாழ்க்கைக் கேற்ற நடைமுறை ஆலோசனைகளையும் கூடவே அளித்து அவர்களுக்காக ஜெபித்தார். ஜெபவேளையின்போது, 60 வாலிபர் தங்கள் வாழ்க்கையை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்தனர். அர்ப்பணித்த வாலிபர் கிறிஸ்துவில் நிலைத்து நிற்கவும் மற்றும் கிறிஸ்துவை அறியாத பணித்தள வாலிபரை கர்த்தர் சந்திக்கவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 25**

2025 டிசம்பர் மாதத்தில், பணித்தளங்களிலும் மற்றும் பணித்தளங்களைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் நடைபெற்ற பல்வேறு கிறிஸ்மஸ் நிகழ்ச்சியின் மூலமாக சிறியோர், வாலிபர் மற்றும் பெரியோருக்கு கிறிஸ்து பிறப்பின் காரணத்தையும், கூடவே நற்செய்தியையும் அறிவிக்க கர்த்தர் உதவிசெய்தார். சன்பட்டியா, நோதன் மற்றும் நர்கட்டியகஞ்ச் ஆகிய பணித்தளங்களில் விரைவில் ஆலயங்கள் கட்டப்பட ஜெபிப்போம்.

**ஜனவரி 26**

பேதியா மற்றும் நிமோஹியா பணித்தளங்களில் கிறிஸ்துவை தங்கள் வாழ்க்கையின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்ற 16 பேர் கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை உடன்படிக்கையின் மூலமாக வெளிப்படுத்தினர்; தேவனுக்கே மகிமை! பஹாகா பணித்தளத்தில் எதிர்ப்புகள் காரணமாக ஒரு வருடமாகத் தடைபட்டிருந்த ஆராதனையினை மீண்டும் தொடங்க கர்த்தர் உதவிசெய்தார். இப்பணித்தளத்தில் ஊழியத்திற்கு எதிராயிருப்போரை கர்த்தர் சந்திக்க ஜெபிப்போம்.

## வாலிபர் கூடுகை – சப்ரா





## கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள்



## சிறுவர் ஊழியங்கள்



# மத்திய மண்டலம்

**ஜனவரி 27**

கூபா பணித்தளத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமின் வாயிலாக, கூபா மற்றும் இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த சுமார் 350 பேர் பயனடைந்தனர். அத்துடன், சௌபியா கிராமத்தில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமின் மூலமாகவும் 268 பேர் பயனடைந்தனர். சிகிச்சையுடன் கிறிஸ்துவின் அன்பினையும் கூறி அவர்களுக்காக ஜெபிக்க கர்த்தர் கிருபை செய்தார். பணித்தளங்களில் மருத்துவ வசதியின்றி காணப்படும் கிராமங்களுக்காக ஜெபிப்போம்.

**ஜனவரி 28**

திலௌத்து, பஞ்சாரி மற்றும் திலோக்கர் ஆகிய பணித்தளங்களில், கிறிஸ்து பிறப்பு தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் பணித்தள மக்கள் சுமார் 400 பேர் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியின்போது, சுவிசேஷப் பாடல்கள் மற்றும் நாடகங்களுடன் கிறிஸ்து பிறப்பின் காரணத்தை சுவிசேஷமாகவும் மற்றும் கைப்பிரதிகள் வாயிலாகவும் கூடிவந்தோர்க்கு அறிவிக்க கர்த்தர் உதவிசெய்தார். இப்பணித்தளங்களில் செய்யப்பட்டுவரும் தொடர் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

**ஜனவரி 29**

ஹஸ்புரா பணித்தள ஆலயத்தில் நடைபெற்ற பெண்களுக்கான சிறப்புக் கூடுகையில் பணித்தள விசுவாசிகள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்; இக்கூடுகையில், சகோதரி விமலா ஜான்சன் கர்த்தருடைய வார்த்தையுடன் பெண்களுக்கான ஆலோசனைகளையும் வழங்கி, அவர்களுக்காக ஜெபித்தார். பணித்தள பெண்கள் மத்தியில் செய்யப்பட்டுவரும் ஊழியங்களுக்காகவும், பெண்கள் சமுதாயத்தில் வல்லமையாகப் பயன்படுத்தப்படவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 30**

ஹர்க்கா, தரிஹட், பாபுகஞ்ச் மற்றும் இப்பணித்தளங்களைச் சுற்றியுள்ள கிராமங்களில் விசுவாசிகளின் வீடுகளில் நடைபெற்ற வீட்டு ஜெபக் கூடுகைகளை கர்த்தர் ஆசீர்வதித்தார். சைன்புரா பணித்தளத்தில் நடைபெற்ற இரவு ஜெபக் கூட்டத்தில் 50 விசுவாசிகள் கலந்துகொண்டு பல்வேறு குறிப்புக்களுக்காக பாரத்துடன் ஜெபித்தனர். பணித்தளங்களில் வீட்டு ஜெபக் கூடுகைகள் பெருகவும், விசுவாசிகளின் வீடுகள் கிறிஸ்துவை அறிவிக்கும் ஸ்தலங்களாக மாறவும் ஜெபிப்போம்.

**ஜனவரி 31**

பணித்தளங்களில் செய்யப்பட்ட சிறுவர் ஊழியங்களின் மூலமாக 1213 சிறுவர் சிறுமியருக்கு கிறிஸ்துவின் அன்பினை அறிவிக்க கர்த்தர் உதவிசெய்தார். ஒவ்வொரு ஞாயிறு மாலையிலும் நடைபெற்றுவரும் வேதாகம வகுப்புகளில் 50 வாலிபர் ஆர்வமுடன் பங்கேற்றுவருகின்றனர். தன்சா ,சடுக்கி மற்றும் கர்மஹி ஆகிய பணித்தளங்களில் கல்வி ஊழியத்துடன் செய்யப்பட்டுவரும் ஆத்தும ஆதாயப் பணிகளுக்காகவும், பணித்தளங்களில் நடைபெற்றுவரும் கட்டுமானப் பணிகளுக்காகவும், கப்பர்புட்டி பணித்தளத்தில் ஆலயம் கட்டப்பட விரைவில் நிலம் வாங்கப்படவும் ஜெபிப்போம்.


கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி
மருத்துவ முகாம்
GEMS MEDICAL CAMP
MEDICAL CLINIC
हैंड ऑफ़ होप
சிறுவர் ஊழியம்
சுவிசேஷ ஊழியம்



# சிறுவர் பகுதி

மனப்பாட வசனம்
பிலிப்பியர் 3:12

## Joan of Arc 1412 - 1431

## ஜோன் ஆப் ஆர்க் – (1412 – 1431)



எல்லா குட்டீஸ்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துகள்! எங்கும் ஏகப்பட்ட இயற்கைப் பேரழிவுகள்... பூமிஅதிர்ச்சிகள், வெள்ளங்கள்... இன்னும் யுத்தங்கள் ஓய்ந்தபாடில்லை. மத்திய கிழக்கு நாடுகளில், இஸ்ரவேல் - பாலஸ்தீனம் மற்றும் ரஷ்யா - உக்ரேன் போன்ற நாடுகளில் சில ஆண்டுகளாக யுத்த மேகங்கள் கலைந்தபாடில்லை. 15 ஆம் நூற்றாண்டில், 13 வயதினிலே தெய்வ தரிசனங்கள் பெற்று, தேவசத்தம் கேட்டு, பின் 16 வயதிலே யுத்தத்திற்குச் சென்று, தேவனின் பெலத்தில் வென்று உலகையே திரும்பிப் பார்க்க வைத்த ஓர் இளம்பெண்ணின் வாழ்க்கையைத்தான் இங்கே நாம் பார்க்கப் போகிறோம்.

பிரெஞ்சில் “ஜீன் டி ஆர்க்” என்று அழைக்கப்பட்ட இவர், பிரான்ஸ்க்கும் இங்கிலாந்துக்கும் இடையே நீண்ட காலமாக நடைபெற்று வந்த நூறாண்டுப் போரின் காலத்தில், பிரான்சின் டாம்ரேமி என்ற சிறிய கிராமத்தில் வாழ்ந்த ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் 1412 ஆம் ஆண்டு பிறந்தார். உங்களைப் போன்று படிக்கவோ அல்லது எழுதவோ அவருக்குத் தெரியாது. ஆனால், அவர் மிகுந்த நம்பிக்கையும் தைரியமும் கொண்டவர்.

டீன்ஏஜ் பருவம் தொட்டதிலிருந்து ஜோன் தேவனை அதிகமாகத் தேட ஆரம்பித்தார். சில வேளைகளில் தெளிவான குரலில் தேவ சத்தத்தை அவர் கேட்டபோது, அதை மக்களிடம் கூறினார். பிரான்ஸ் தேசத்தை விடுவிக்க வேண்டும் என்றும், இளவரசர் சார்லஸ் VII - ஐ அரசராக்க உதவவேண்டும் என்றும் ஜோன் மக்களுக்குச் சொன்ன போது, மக்கள் அவரை சிறு பிள்ளை விளையாட்டுத்தனமாக பேசுகிறது என்று வேடிக்கைப்

பார்த்தனர். ஓர் இளம்பிள்ளை என்பதால் ஆரம்பத்தில் யாரும் நம்பவில்லை; அவரை கண்டுகொள்ளவில்லை. பின்னர் அவர் பலரிடம் பேசி எப்படியோ இளவரசர் சார்லஸை நேரில் சந்திக்கும் வாய்ப்பு அவருக்கு எட்டியது. அவரது ஆன்மீக பெலத்திலும், பேச்சிலும் ஆழ்ந்த நம்பிக்கையிலும் ராஜாவே மிகவும் வியப்படைந்தார்.

1429 ஆம் ஆண்டு முற்றிக்கையிடப்பட்ட ஆர்லியன்ஸ் நகருக்கு அனுப்பப்பட்ட பிரெஞ்ச் நிவாரணப்படையை வழிநடத்த ஜோனுக்கு படைக்கவசம் அளிக்கப்பட்டது. பிரெஞ்ச் ராணுவத்துடன் போருக்கு சென்று மன்னருக்கு உதவி செய்து பிரான்ஸ் நாட்டை திரும்பப் பெறவேண்டும்; இதுதான் அவருக்குக் கொடுக்கப்பட்ட மாபெரும் கட்டளை! கட்டளை பிறந்ததும் வீரமுடன் எழும்பினார் ஜோன்; தன் தலை முடியைக் கத்தரித்துக்கொண்டு, போர் உடை அணிந்து, வேதத்தில் வரும் தெபோராள் போல போர்க்களம் கிளம்பிவிட்டாள்! அவரின் வருகை வீரர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது. எங்கும் யுத்தசத்தம்... கார்மேகங்கள் போன்று தெரிகிறது. மக்கள் நிம்மதியின்றி பயத்துடனும் கலக்கத்துடனும் இங்கும் அங்குமாக அலைமோதுகின்றனர்.

இவர் கிறிஸ்தவ பெண் என்பதால் திருச்சபை போதகர்கள் மற்றும் தலைவர்கள் கூட்டம் சிறு பெண்ணை உற்சாகப்படுத்தாமல் மாறாக அவளை பரிகாசமும் கேலிக் கிண்டலும் செய்தனர். இப்பெண் என்னதான் செய்வாள் என்று ஏளனமும் செய்தனர். ஆனால் தாவீதைப்போல கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வந்த சிறிய படையோ வீரமுடன் போரிட்டது. ஜோன் பிரெஞ்ச் வீரர்களுக்கு அதிகமாக நம்பிக்கையூட்டினதால் ஒன்பது நாட்களுக்குள்ளே ஆங்கிலேயர்களிடமிருந்து ஆர்லியன்ஸ் நகரைக் கைப்பற்றி வெற்றிவாகை சூடினர். இது போரில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. ஒன்றல்ல, இரண்டல்ல... தொடர்ச்சியாக நான்கு வெற்றிகளைக் குவித்துவிட்டார் ஜோன்! ஜோனின் தலைமையில் நடந்த இந்த "ஆர்லியன்ஸ் நகரின் விடுதலை" பிரான்ஸ்க்கான மிகமுக்கிய வெற்றியாக வரலாற்றில் அமைந்தது. இந்த வெற்றிகள் தான் சார்லஸ் VII - ஐ ரீம்ஸ் நகரில் அரசராக முடிசூட உதவின. இந்திய வரலாற்றில் ஜான்சியின் ராணி இலட்சுமிபாய் போன்று பிரிட்டீஷ் ராணுவத்திற்கு எதிராக வீரப்பெண்மணியாய் வெற்றிச்சிறந்தார் ஜோன்!!

என்ன சுட்டிப்பிள்ளைகளே உங்களைப்போன்றே ஜோனும் படுசுட்டிதான்!!! யுத்தத்தை முன்னின்று நடத்துவது சாதாரண காரியமா?

இந்நாட்களில் யுத்தங்களினால் எத்தனை மரணங்கள்... அழிவுகள்... இழப்புகள்... தாய் தந்தையை இழந்து தவிக்கும் அனாதைக் குழந்தைகள், உணவுக்காக ஓலமிட்டும் ஒன்றும் கிடைக்காமல் பட்டினியால் சாவோர்... அப்பப்பா... ஒவ்வொரு நாளும் நியூஸ் பேப்பரிலும்.. டிவியிலும் பார்க்கும்போது எத்தனையாய் வேதனை...?

ஆனால் பின்னால் என்ன நடந்தது...? மதவாதிகளுக்கோ ஜோனை பிடிக்கவில்லை. அவர்கள் ஜோனை சந்தேகித்தனர், ஏனென்றால்,

அவர்களுக்கு இப்படிப்பட்ட தேவதரிசனங்கள், திட்டங்கள் கிடைக்கவில்லை... இல்லையா... பிள்ளைகளே..? தாங்கிக்கொள்ள முடியாத அக்கூட்டம் அவளை "பொய்புரட்டுக்காரி" என்று தீர்ப்பிட்டு திருச்சபைக்கு புறம்பாக்கியது. ஆனால், அவரோ தனக்கெதிராக சொல்லப்பட்ட அத்தனை அவதூறுகளையும் ஆணித்தரமாக மறுத்ததோடு தகுந்த விளக்கங்களையும் தந்தார். இது அவர்களை மேலும் மேலும் நடுங்கச்செய்தது.

1430 ல் ஜோன், பிரிட்டீஷ் - பிரெஞ்ச் கூட்டாளிகளான உளவு பார்த்த எதிரிகளால் பிடிக்கப்பட்டு ஆங்கிலேயர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். அவருக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு பிரிட்டீஷ் ஆதரவுடைய நீதிமன்றத்தில் அநியாயமாக விசாரிக்கப்பட்டது. "சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும்.." என்று அன்று கூவின கூட்டம் போல் இங்கேயும் "மரணதண்டனை கொடுக்கப்படவேண்டும்" என்று ஏவிவிட்டனர். ஜோனை விடுவிக்கவோ அவருக்காக பரிந்து பேசி வாதிடவோ யாருமே இல்லையா? ஜோனுக்கு கொடுக்கப்பட்ட வேலையும் நோக்கமும் (purpose) நிறைவேறிவிட்டனவா?

ஆம்; எதற்காக ஜோன் தேவனால் பிடிக்கப்பட்டாரோ அதை செய்து முடித்துவிட்டார். தன்னை பூரணமாக தேவனின் கரங்களில் ஒப்புக்கொடுத்தார்.

1431-ல் மே 31 அன்று இளம்பெண் ஜோன் தனது 19 வயதிலேயே ரூவான் நகரில் மரத்தில் கட்டப்பட்டவராய் தீயில் உயிருடன் எரித்துக் கொளுத்தப்பட்டார். கொடுங்கோலர்கள் வேடிக்கைப் பார்க்க, அத்தீயின் நடுவே அவர் உதடுகள் "இயேசுவே... இயேசுவே..." என்று முணுமுணுக்க உடல் எரிந்தது... உயிர் பிரிந்தது... விண் நோக்கிப் பறந்தது...!

இயேசு கிறிஸ்து விண்ணைவிட்டு மரிப்பதற்காகவே மண்ணில்வந்து அத்தனை பாடுகளையும் வேதனைகளையும் நமக்காக சகித்து மரித்து உயிர்த்தார் என்றால் அவருக்காக நாம் எந்த தியாகத்தையுமே பெரிதாக செய்துவிட முடியாது.

25 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு மறுவிசாரணையில் ஜோன் "நிரபராதி" குற்றமற்றவர் என்று அறிவிக்கப்பட்டதோடு அவர் தியாகி என்று தெரிந்து நிரூபிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது! அதோடு கத்தோலிக்க திருச்சபையால் அவருக்கு "புனிதர்" பட்டமும் கொடுக்கப்பட்டது!! ஜோன் ஆப் ஆர்க் இன்றும் பிரெஞ்சு தேசத்தின் ஒற்றுமை, வீரம் மற்றும் நம்பிக்கையின் நீடித்த சின்னமாக விளங்குகிறார்.

அன்பான செல்லங்களே! எப்படி இப்பெண் உலக வரலாற்றில் மட்டுமின்றி தேவனுடைய பெரிய history யில் வந்திட்டாங்க பார்த்தீங்களா? நீங்களும் அதே ஹிஸ்டரியில் ஒரு முக்கியமான part அப்படித்தானே...? உங்க வாழ்க்கையிலும் தேவனுக்கு ஒரு நோக்கம் உண்டு தானே... அது என்னன்னு புரிஞ்சிருக்கீங்களா... குட்டீஸ்?

## National Promotional Center

Mr. Russelraj (Bell Shath), No. 11, 13th Cross Street, Chrompet, Chennai – 600044. Ph: 9661504639

## Tamil Nadu - Promotional Admin Office

Mr. J.Ravi David, GEMS, No. 14/1, Jeba Nagar, Vasanthapuram South Street,

Near Vijaya Garden, Tirunelveli – 627005. Ph: 9789135842

## Tamil Nadu - South Division Promotional Center

Mr. Ebenezer, No. 21, Sharon Church Street, Booman Nagar, Madurai – 625018. Ph: 9865583563

## Tamil Nadu - North Division Promotional Center

Mr. Stanley, No. 11, 13th Cross Street, Chrompet, Chennai – 600044. Ph: 8925811571

## Tamil Nadu - Regional Promotional Centers

Chennai – Mr. Stanley, No. 11, 13th Cross Street, Chrompet, Chennai – 600044. Ph: 8925811571

Madurai – Mr. Jebakumar, No. 3/514, Aavin Nagar, Surveyar Colony, Madurai – 625007. Ph: 9442934613

Trichy –GEMS, Revival House, No.10, Anbu Nagar, Sangiliyandapuram, Trichy–620001. Ph: 9489520179

Tirunelveli – Mr. Johnraj, 14/109A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai – 627002. Ph: 9443113322

Coimbatore – Mr. Asirvatham, Rehoboth, 6A/170-A/6, Gandhi Nagar, Near Women's Hostel, Sundarapuram, Coimbatore – 641024. Ph: 9443429735

## Other States Promotional Centers

| | |
|---|---|
| Bengaluru | - Dr. Sam – 9844287046, Mr. Godwin – 8050457335 |
| Delhi NCR | - Mr. Siva - 7022008675 |
| Hyderabad | - Mr. Kingston – 9440345681, Mr. Sampath – 8409962144 |
| Kerala | - Mr. Kanakaraj – 9486357950, Mr. Kaniraj – 9495896522 (Munnar) |
| Mumbai | - Mr. NandaKumar S - 94555 65333, Mr. Kanagaraj – 8655358343, Mr. Sundaraj – 9869223377 |
| Puducherry | - Mr. Ilango – 8248832423, Mr. Elan Chezian – 8409502240 |
| Pune | - Mr. Joseph Ravindaran – 9423006688 |
| Vijayawada | - Mr. Suresh – 9441207275 |
| Visakhapatnam | - Mr. Abisekaraj – 9440429895 |

# Tamil Nadu - Promotional Centers

Alangulam- Mr. Arockiyam – 9965004591

Arakonam - Mr. Sam Kirubahar – 7339036255

Arupukottai - Mr. Pooviah – 9486666570

Athoor - Mr. Prakash – 9524533777

Chennai - Mr. Ebenezer Daniel - 9094086869
Mr. N. Stephen Srinivasan– 9789904762
Mr. Alexander Martin – 9940448999

Chidambaram - Mr. Abraham – 9788886110

Coimbatore - Mr. D.Ranoji Sindhiya – 9443367278

Mr. Emerson Devaraj – 9789300400

Mr. Ravi – 8610388922

Coonoor - Mr. Vinoth – 6379489469

Dharapuram - Pr. Siluvai – 9486030774

Dindigul - Mr. Kumar – 88258 02588

Erode - Mr. Joseph Raj – 9384737802

Hosur - Mr. James – 9994248957

Kalakad - Mr. Mathiazhagan – 9486428329

Kanyakumari - Mr. Johnson – 9443340946

Karaikudi - Mr. Kiruba Jesudas – 7867822817

Karur - Mr. Kumar – 9865841450

Kodaikanal - Mr. Godwin – 9443221776

Kovilpatti - Mr. Kennedy – 9944755640

Mrs. Viji Albert – 9025152550

Krishnagiri - Mr. Jesudas – 9443237101

Kumbakonam - Mr. Sundar Singh – 9443372078

Marthandam - Mr. Jebasingh – 9788689771

Mettupalayam - Mr. Augustine – 9443023247

Mudalur - Mr. Charles – 9976441440

Nazareth - Mr. Abraham – 9442094110

Nagercoil - Mr. Raj kumar – 73588 57606

Neyveli - Sis. Maria George – 6381703507

Nagappattinam - Mr. Johnpaul - 94432 79502

Palani - Mr. Paul Thiyagarajan – 9443013472

Palayamkottai - Mr. Kunasekar – 9942808321

Pudukkottai - Mr. Innasai Muthu – 8760607448

Rajapalayam - Mr. Yosabath – 8438149117

Rasipuram -Mr.Novah Nelamegam – 7010722096

Sawyerpuram - Mr. Anton – 9940879747
Mr. Vimalraj - 9043146700

Salem - Mr. Gunasekaran – 9442337027

Sivakasi - Mr. Dharmaraj – 9843088840

Mr. Devadoss – 9442775114

Somanur - Mr. Thomas – 9488444040

Thanjavur - Mr. Joseph – 9360311488

Tindivanam - Mr. Rajan – 9994481306

Tirumangalam - Mr. Sudhakar – 9344414464

Tirunelveli - Mr. Yesumani – 8870393213

Mr. Swamidas - 94870 80347

Tiruppathur - Mr. Kannan – 7639372360

Tiruppur - Mr. Asir Selvam – 9842298244

Tiruvannamalai - Mr. George – 8754211843

Theni - Mr. Daniel – 7373307321

Thenkasi - Mr. Kennedy – 9944395889

Trichy - Mr. Iwin Thomas – 9489520179

Tuticorin - Mr. Manikaraj – 9442166061

Mr. Sathiyaseelan – 9442210629

Mr. Ulaganathan – 9843007767

Mr. Selvakumar – 9626851323

Valliyoor - Mr. Balan – 9488064199

Vaniyambadi - Mr. Uvaraj – 8072227048

Vellore - Mr. Mohan – 9003635959
Mr. Ganeshan – 9994339404

Villupuram-Mr.Jebakumar Samuel – 9445559926


பணித்தளங்களில்
கிறிஸ்து பிறப்பு தின நிகழ்ச்சிகள்
ஔரங்காபாத்




*if undelivered please return to*

**GEMS Educational and Media Services**

14/1, Jeba Nagar, Vasanthapuram South St.,
Melapalayam (post). Tirunelveli
Pin - 627 005. Ph : 8925811572
E-Mail : gemssatham@gmail.com

To

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................